# திருமதி ரங்கம்மாள் தமிழ் நாவல் பரிசுப்போட்டி 2019

## எழுத்தாளர் அ.வெண்ணிலா எழுதிய **கங்காபுரம்**
## திருமதி ரங்கம்மாள் தமிழ் நாவல் பரிசு ரூ.**50,000/-**

கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம் 1981ம் ஆண்டு அமரர் உயர்திரு சீனிவாசன் அவர்களால் கலை மற்றும் இலக்கிய முன்னேற்றத்திற்காக தோற்றுவிக்கப்பட்டது.

இலக்கிய முன்னேற்றத்திற்காக இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இந்தியாவில் வெளியாகும் சிறந்த தமிழ் நாவலுக்கு ரொக்கப்பரிசினை திருமதி ரங்கம்மாள் பரிசு என்ற பெயரில் வழங்கி வருகிறது.

2017 – 2018ம் ஆண்டுகளில் வெளியான 40 நாவல்கள் இவ்வாண்டு பரிசுப் போட்டிக்கு வந்தன. அவற்றுள் எழுத்தாளர் அ.வெண்ணிலா எழுதிய ‘‘**கங்காபுரம்**’’ என்ற நாவல் அகநி வெளியீடு, 2019ம் ஆண்டு திருமதி ரங்கம்மாள் பரிசுக்கு தகுதியென நடுவர் குழுவால் தேர்வு செய்யப்பட்டு எழுத்தாளர் அ.வெண்ணிலா அவர்களுக்கு பரிசுத்தொகை ரூ.40,000/- நாவலை வெளியிட்ட அகநி வெளியீடு பதிப்பகத்திற்கு ரூ.10,000/- வழங்கப்படவுள்ளது.

நாவல் தோன்றியதற்கான ஆசிரியரின் கூற்று:

சோழர் காலக் கோயில்கள், கட்டடக் கலை, ஆட்சி நிர்வாகம், நீர் மேலாண்மை இவை பற்றி அறியும் ஆவலுடன் தஞ்சையில் தொடங்கி, காஞ்சிபுரம் வரை சோழர்களின் நிலப்பரப்பின் ஊடாகவும், கோயில்களைப் பார்க்கவும் பயணம் போனேன். அது 2011 ஆம் ஆண்டு. அந்தப் பயணத்தினுடே ஒரு நாள் கங்கை கொண்ட சோழபுரம் சென்றேன். சுற்றியிருந்த சோழ மாளிகை, உட்கோட்டை என சோழ அரசர்களின் அரண்மனைகள் இருந்த பகுதிகளையும் பார்த்துக் கொண்டிருந்தேன். 250 ஆண்டுகள் பிற்காலச் சோழர்களின் தலைநகரமாக இருந்த நகரம், தற்போது சிறு நகரத்தைவிட சுருங்கியிருந்தது. ஆட்சியதிகாரத்தின் பொலிவைப் பார்க்க முடியாததோடு, வாழ்வின் குதூகலமும் முற்றாகக் காணாமல் போயிருந்தது. தஞ்சையின் நிலையும் கங்கை கொண்ட சோழபுரத்தின் நிலையும் மனத்தில் பல்வேறு கேள்விகளை எழுப்பின. புகழின் உச்சத்தில் ஒரு தலைநகர் இருக்கையில் ராஜேந்திரன் தலைநகரை மாற்ற வேண்டிய அவசியமென்ன? தஞ்சை பெரிய கோயிலை மிஞ்சும் வண்ணம் இன்னொரு கோயிலை நிர்மாணிக்க நினைத்தது ஏன்? கங்கை வெற்றி என்பது ஒரு காரணமாக அமைந்துவிட்டதா? அவ்வூரில் நிலவிய அசாதாரணமான அமைதி பெரும் துயரமாக என்னுள் பரவியது.

அந்தத் துயரத்தை அதிகப்படுத்துவதாக இன்னொரு வரலாற்றுச் செய்தியும் தெரிய வந்தது. சோழ தேசத்தின் ஒரே வாரிசான ராஜேந்திர சோழனுக்கு ஐம்பது வயது வரை இளவரசு பட்டம் சூட்டப்படவில்லை என்ற செய்தி வரலாற்றுக்குள் மறைந்து கிடக்கும்

ரகசியமொன்றாக எனக்குத் தோன்றியது. மாவீரனான ராஜேந்திரனை இளவரசனாக முடிசூட்ட ராஜராஜன் தாமதித்தது ஏன்? ராஜராஜனுக்குப் பிறகு, அரசனான ராஜேந்திரன் தலைநகரை தஞ்சாவூரில் இருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றியதற்கான காரணமாக, ராஜேந்திரன் புறக்கணிக்கப்பட்ட இந்தப் புள்ளியையே அடையாளம் கண்டேன். என் நாவல் இங்கிருந்துதான் தொடங்கியது.

------------

## Tmt.Rangammal Prize Tamil Novel Prize 2019

### Tmt.Rangammal Prize Rs. 50,000/-
### To Vennila's "Gangapuram"

Kasthuri Sreenivasan Trust was established in the year 1981 by Late K.Sreenivasan in order to promote art & literature.

In order to promote literature the trust is conducting Tmt.Rangammal Prize every two years once. Here the novels which are published in India are considered. The best novel selected for Tmt.Rangammal Prize consists of cash award, certificate and memento.

For 2019 prize, 40 Tamil novels were received which were published during the year 2017 & 2018. Of those A.Vennila's **"Gangapuram"** and published by Agani Veliyeedu publications has been selected by the judges unanimously for Tmt.Rangammal Prize. The prize award segregates into two parts. As that 80% of cash award goes to the author and 20% to that of Publisher.

So here the cash prize of Rs.40,000/- goes to Vennila and Rs.10,000/- to the Agani Veliyeedu publications.

As Author says:

To know the chola temples and temple architecture, administration, irrigation and social life I started travelling extensively from the year 2011.

My travel was started from Tanjore to Kancheepuram. During one such travel I went to Gangaikonda Chozhapuram. GKC was the capital of the Chola Empire for more than 250 years. But now it has no traces of the by gone glory. It is a sleepy village which lost all its grandeur and glamour. Its past and its present condition gave raise to so many question in my mind.

One of the questions which strikes me most was why Emperor Rajendra chola shifted his capital from Tanjore to Gangaikonda Chozhapuram where the Tanjore was at its height, politically and economically. I studied Rajendra Chola's life, through the

primary sources like copper plates and inscriptions, I was astonished to find that Rajendra Chola was not crowned as Prince and King in waiting. This is also a puzzle with Chola History.

Rajendra Chola's belated recognition as crown prince and shifting of capital from Tanjore to Gangaikonda Chozhapuram made me to travel backwards . This is the canvas, outline and framework of the novel.

------------